இராணிப்பேட்டையில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

இராணிப்பேட்டை மாவட்டம் – 'சிப்காட்' பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் நேற்று, "டாட்டா மோட்டார்ஸ்" நிறுவனத்தின் வாகன உற்பத்தி ஆலையைத் தொடங்கி வைக்கச் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழிநெடுகிலும் கழகத்தினர் சார்பில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் எழுச்சிமிகு வரவேற்பளிக்கப்பட்டது. மேலும் தம்மை வரவேற்று நடைபெற்ற கண்கவர் கலை நிகழ்ச்சிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டுகளித்தார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில்

புதிய வாக்காளர்கள் சேர்த்தல், நீக்கல் பணியில் விரைந்து ஈடுபடுவீர்!

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

திருவண்ணாமலை, செப்.29-

புதிய வாக்காளர்கள் சேர்த்தல் மற்றும் நீக்கல் பணியில் விரைந்து ஈடுபடு வீர் என திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட நிர்வாகிகளுக்கு கழக உயர் நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும், பொதுப்ப ணித்துறை அமைச்சரு மான எ.வ.வேலு அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர்விடுத் துள்ள அறிக்கையில் கூறி யிருப்பதாவது:-

01.01.2025 தேதியை தகு தியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டி யல் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டி யலைத் தேர்தல் ஆணை யம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது.

29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களை சேர்க்க வும் மற்றும் பெயர்கள் நீக் கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகா சம் கொடுக்கப்பட்டுள்

ளது. இது தவிர தமிழ்நாடு மாநில தலைமைத் தேர்தல் அலுவலர் அவர்களால் அறி விக்கப்பட்டு, வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிறு அன்று நிர்ணயிக்கப்பட்ட மையங் களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

மேற் குறிப்பிட்ட நாட் களில் விடுபட்ட வாக்கா ளர்களும், இடம்மாறிய வாக்காளர்களும், 01.01.2025 அன்று 18வயது நிரம்பகூடிய புதிய வாக்கா ளர்களும், தங்கள் பெயர் களை சேர்க்க, நீக்க, திருத் தங்கள் மேற்கொள்வதற் கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்த படி வங்களை அந்த அந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

- புதிய வாக்காளர் கள் சேர்த்திட படிவம் 6
- வாக்காளர்களை நீக்கிட படிவம் 7
- வாக்காளர் பட்டி யலில் திருத்தம் செய்திட படிவம் 8

புதிய வாக்காளர்களாக விண்ணப்பிப்பவர்கள் தங் களின் புகைப்படம், வய துக்கான சான்று, ஆதார் அட்டை நகல், குடும்ப அட்டை நகல் இணைத் திட வேண்டும்.

1. வரைவு வாக்கா ளர் பட்டியல் வெளியிடு தல் 29.10.2024

2. பெயர்களை சேர்க்க/ நீக்க/ திருத்தம் செய்வதற்கு விண்ணப்பம் கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை.

3. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் 06.01.2025

இதன் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18வயது நிரம் பியவர்களின் பெயர்களை யும், வாக்காளர் பட்டிய லில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதியதாக குடிபெயர்ந் துள்ள வாக்காளர்களின் பெயர்களையும், புதிய வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியில் இருந்து இடம் பெயர்ந்த வர்கள் மற்றும் இறந்தவர்க ளின் பெயர்களை தற் போது உள்ள பட்டியலி லிருந்து நீக்கிடவும்,

திருவண்ணாமலை தெற்கு வடக்கு மாவட்டத் தில் உள்ள மாவட்ட நிர் வாகிகள், பணிக்குழு நிர் வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலா ளர்கள், ஊர் கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர் வாகிகள் மற்றும் வாக்குச் சாவடி முகவர்கள் ஆகி யோர் தங்களை முழுமை யாக ஈடுபடுத்திக்கொண்டு, வாக்காளர் பட்டியலை சரி பார்த்தலை விரைந்து மேற்கொள்ள கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் கூறியுள்ளார்.

கழக முப்பெரும் விழா : அமைச்சர் பி.கே.சேகர் பாபு முன்னிலை ! பி.கே.மூர்த்தி தலைமை !

அம்பத்தூரில் - கல்லூரி மாணவ - மாணவியருக்கு கல்வி உதவித்தொகை!

டி.ஆர். பாலு எம்.பி. - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி - சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. வழங்குகின்றனர்!

சென்னை செப் 29-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் பவளவிழா ஆண்டு கழக முப்பெரும் விழா திராவிடத் தொடர்-7 நிலை யான கல்விக்கு உதவு வோம்! நிலமெங்கும் புகழ் பெற உயர்த்துவோம்!! கல்லூரி மாணவ - மாணவி யருக்கு கல்வி உதவித் தொகை மற்றும் உபகர ணங்கள் வழங்கும் விழா 01.10.2024 செவ்வாய் கிழமை மாலை 4 மணிக்கு மோகன் கார்டன் அக்ரஹா ரம், கொரட்டூரில் நடைபெ றுகிறது

இம்மாபெரும் விழா விற்கு தலைமை செயற்குழு உறுப்பினரும், அம்பத்தூர்-7வது மண்டலகுழு தலைவ ருமான பி.கே.மூர்த்தி தலைமை வகிக்கிறார்,

சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும் இந்து சமய அறநிலையத் துறை(ம) சென்னை பெருந கர வளர்ச்சி குழுமம் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு மற்றும் மேயர். திருமதி. பிரியாராஜன், பகு திசெயலாளர்கள், ஜோசப் சாமுவேல்,எம்.எல்.ஏ, எம். டி.ஆர்.நாகராஜ், டி.எஸ். பி.இராஜகோபால்எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி, ஜி.நாகவள்ளி எம்.சி, எல்.பி.எப்.மோகன், து.ஆயி ரம், வி.ரமேஷ்(எ) நீலகண் டன்எம்.சி, ,கு.கிருஷ்ண மூர்த்தி, டாக்டர். பூர்ணிமா எம்.சி, , . ஜெ.பாலமுருகன், அ.திராடசெல் வம், க.முர ளிபாபு, க.கதிஜா, மா. ரமேஷ், து. ஜெகநாதன், பி.ஆர். இளங்கோவன், பா.பொற்செழியன், இரா. லட்சுமிரங்கசாமி, மேனாம் பேடு. இ.ராமு, மு.நடரா ஜன் து.செல்வராஜ், ஆர்.கதி ரவன், எஸ்.கவிதாசெல்ல துரை, கு.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாமன்ற உறுப்பினர்கள். உஷா நாகராஜ் எம்.சி, க.. பொற்கொடி எம்.சி, எஸ். உமா எம்.சி,

வட்டசெயலாளர் கள்வெ.ரவீந்திரன், பு.வீரா, வெ.ராதாகிருஷ் ணன், மு.இரகு, த.கண்ணபிரான், எம்.கமல், மு.சண்முகம், ஆ. சுந்தர்ராஜ், மு.விஜயகுமார், த.வ.லால்த.பிரகாஷ்குமார், சி.சீனிவாசன், எம்.இ.சேகர் எம்.சி, , ந.நெப்போலியன், இரா.டீக்கா, ஆகியோர் வர வேற்கின்றனர்.

மாவட்டபிரதிநிதிகள்: வடக்கு,கிழக்கு,தெற்கு : எம்.குணசேகரன், ப.மதி, மா.குப்புசாமி, க.ஜீவா, கோ. சேகர்லால், பொன். நவராஜ்ரவி, ஆ.இரா. அருண், எஸ்.பி.அரிகிருஷ் ணன், எம்.ஹரிகிருஷ்ணன், பி.வி.மூர்த்தி, கே.செல்வம், கோ.முத்து குமாரசாமி, கோ.ராஜ் குமார், ந.குமார வடிவேல், ச.கோதண்டன், கோ.இன்பசேகரன், ஆர். விமலன், ஜெ.ஐயப்பன், எஸ்.பரமசிவம், பொ.சேது ராமன்(எ) பொன்சேட்டு, ஏ.கே.டி.பாஸ்கர், பா. மாறன், டி.சுரேஷ்பாபு, ஆர்,ஜெயராமன், சோ.மதி யழகன், எஸ்.கே.சதீஸ்கு மார், எஸ்.எஸ்.சவரிமுத்து, எஸ்.எம்.முருகானந்தம், ஏ.வி.தட்சிணாமூர்த்தி, ஆகி நோர் வரவேற்கின்றனர்.

கழகப் பொருளாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர். பாலு, எம். பி பள்ளிகல்விதுறை அமைச் சர், அன்பில் மகேஸ் பொய் யாமொழி, கழக மாணவர் அணி செயலளார் சி.வி.எம். பி. எழிலரசன் எம்.எல்.ஏ, ப. தாயகம் கவி, எம்.எல்.ஏ, அ. வெற்றிஅழகன், எம்.எல்.ஏ, பி.டி.சி.செல்வராஜ், அம்பத் தூர் தொகுதி பொருப்பா ளர் ஆகியோர் சிறப்புறை யாற்றுகின்றனர்.

தொகுதிக்குட்பட்ட பி.எல்.ஏ-2 பாகநிலை முக வர்கள், அனைத்து அணிக ளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிள், பி.எல்.சி பாக முகவர்கள், கழக முன்னோடிகள் உள் பட பலரும் நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர், வட்ட செயலாளர் சீ.லோக நாதன், சு.மோகன்குமார் நன்றி கூறுகின்றனர்.

அரசு தரிசு நிலங்களை கையகப்படுத்தி

அருந்ததிய மக்களுக்கு வழங்கிட தனிக்குழு ஏற்படுத்த வேண்டும்!

முதலமைச்சரிடம் கழக துணைப் – பொதுச் செயலாளர் – நீலகிரி எம்.பி. ஆ.ராசா கோரிக்கை!

நீலகிரி, செப். 29 -

அருந்ததியர் மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங் கிட ஏதுவாக வருவாய் அலுவலக நிர்வாக அலகு ஒன்றை, தனி மாவட்ட வருவாய் அலுவலர் ஒரு வர் தலைமையில் ஒரு கோட்டாட்சியர் மற்றும் போதுமான வட்டாட்சி யர்கள் உள்ளடக்கிய குழுவை அமைக்க வேண் டும் என கழக துணை பொதுச்செயலாளர், நீல கிரி நாடாளுமன்ற உறுப்பி னர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.ராசா முதல மைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை மனு அளித்துள்ளார்.

அதில் கூறியுள்ளதாவது : கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், திருப் பூர், ஈரோடு, கோவை உள் ளிட்ட வருவாய் மாவட் டங்களில் வசிக்கும் ஆதிதிராவிடர் அருந்ததி யர் மக்களுக்கு போது மான வாழ்விட வசதிகள் இல்லை என்பதை தங்க ளின் கவனத்திற்கு பல் வேறு சமூக மற்றும் அரசி யல் அமைப்புகள் ஏற்கனவே கொண்டு வந் துள்ளன.

எனது நீலகிரி நாடாளு மன்றத் தொகுதிக்குட் பட்ட அவிநாசி, மேட்டுப் பாளையம் மற்றும் பவானி சாகர் பகுதிகளில் வருவாய் கிராமங்களில் உள்ள தரிசு நிலங்களை கண்டறிந்து. 500 க்கும் மேற்பட்ட குடியிருப்பு பட்டாக்களை அரசின் மூலம் ஏற்கனவே வழங்கி உள்ளோம். அதுபோலவே

மற்ற மாவட்டங்களிலும் அருந்ததிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட போதுமான அளவு அரசு தரிசு நிலங் கள் உள்ளதாக வருவாய்த் துறை அலுவலர்கள் மூலம் தெரிய வருகிறது.

எனவே, இம்மாவட் டங்களில் உள்ள அரசு தரிசு நிலங்களை கண்ட றிந்து, கையகப்படுத்தி இப் பகுதியில் கணிசமான அளவு மக்கள் தொகை கொண்ட அருந்ததியர் மக் களுக்கு வழங்கிட ஏது வாக "வருவாய் அலுவலக நிர்வாக அலகு" (Revenue Administrative Unit) ஒன்றை, தனி மாவட்ட வருவாய் அலுவலர் ஒருவர் தலை மையில் ஒரு கோட்டாட் சியர் மற்றும் போதுமான வட்டாட்சியர்கள் உள்ள டக்கிய குழு அமைத்து பூர் வாங்க பணிகளை மேற் கொள்ள அன்புடன் வேண்டுகிறேன்.

தலைமைச் செயலாளர் அல்லது வருவாய் செயலா ளர் ஆகியோரின் கண்கா ணிப்பில் இப்பணிகளை குறித்த காலத்தில் முடித்தி டும் வகையில் உரிய ஆணைகள் வழங்கிடவும் அன்புடன் வேண்டுகி றேன் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

செ.தமிழ்வேந்தன் முன்னிலை - எஸ்.புஷ்பராஜ் தலைமை! திரு.வி.க.நகர் 74வது வட்டத்தில்

20 கொடிக் கம்பங்களில் கொடியேற்றல் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்றி வைக்கிறார்!

மேயர் பிரியாராஜன் – 2 கல்வெட்டுகள் திறந்து வைக்கிறார்!

சென்னை, செப் 29-

75-ஆம் ஆண்டு தி.மு.க. பவளவிழாவை முன்னிட்டு கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்களின் ஆணைகி ணங்க, சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் வடக்குப் பகுதி, 74- வது வட்டம் முழுவதும் 2 கல் வெட்டுகளும் 20 கொடி கம் பங்களில் கொடி ஏற்றும் விழாவும் இன்று (29.9.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 07.30 மணியளவில் அம் பேத்கர் மன்றம், ஏகாங்கிபு ரத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு வட்ட செயலாளர் எஸ்.புஷ்பராஜ் தலைமை வகிக்கிறார். திரு. வி.க.நகர் வடக்கு பகுதி கழக செயலாளர் செ.தமிழ்வேந் தன் முன்னிலை வகிக்கிறார்.

பெரம்பூர்.ஆர்.ராஜன், த.வெங்கடேசன், பி.சத்திஸ் ஆகியோர் வரவேற்பு ரையாற்றுகின்றனர்.

கழகக் கொடியை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர்பாபு ஏற்றி வைத்து சிறப்பிக்கிறார்.

கல்வெட்டை மேயர் பிரி யாராஜன் திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் கலாநிதி வீராசாமி எம்.பி., ப.தாய கம் கவி எம்.எல்.ஏ., டி. ராஜி, பி.இளன், வி.மதிமா றன், டி.செண்பகவள்ளி,கே. ஆர்.சதீஷ், அ.மகேந்திரன், ஜி.சீனிவாசன், ஜி.எபிநேசர், எல்.போஸ், அ.அருள், பி. சேகர் மற்றும் இ.ராம மூர்த்தி, எஸ்.உதயகுமார், ஜெ.அன்பு, என்.அமுல் ராஜ், கே.தண்டபாணி, பி. ராமமூர்த்தி, எஸ்.ஸ்ரீதர், கணகசபாபதி, எஸ்.சீனிவா சன், கே.வெங்கடேசன், கே.லட்சுமணன், டி.மனோ கரன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

கே.அப்பு (எ)யோகானந் தன், ஐ.சி.எப்.டி.வினோத், டி.குகன், தேசிங்பாபு, எம். யோகிஸ்வரன், என்.பாலகி ருஷ்ணன், கே.புஷ்பா ஆகி யோர் நன்றி கூறுகின்றனர்.

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் பா.மு. முபாரக் அறிவிப்பு!

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் 1.10.2024 செவ்வாய்க்கிழமை காலை 11 மணி அளவில் மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.போஜன் தலைமையில், கழக தேர்தல் பணி செயலாளர் கா.ராமசந்திரன் முன்னிலையில் மாவட்டக் கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய பேரூர்க் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்:

1. 21.8.2024 நடைபெற்ற மாவட்ட கழக கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுபடி கழக மூத்த முன்னோடிகளுக்கு வழங்கப்பட உள்ள பொற்கிழி பெறுபவர்களின் பட்டியலை நிறைவுசெய்தல்.
2. 29.10.2024 வெளியிடவுள்ள வரைவு வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் குறித்து.
3. கழக ஆக்க பணிகள்.

பா.மு.முபாரக்
செயலாளர், நீலகிரி மாவட்ட தி.மு.க.